RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22s837

# தமிழ் இலக்கிய மரபும் தெய்யமும்

அ. பிரசில்லா [அ, *]

[அ] தமிழ்த்துறை, கேரளப் பல்கலைக்கழகம், காரியவட்டம், திருவனந்தபுரம், கேரளா-695581, இந்தியா

# Tamil Literary Tradition and Theyyam

**A. Precilla[a, *]**

[a] Department of Tamil, University of Kerala, Karyavattom, Thiruvananthapuram, Kerala-695034, India

* Corresponding Author: precillamunnar@gmail.com

Received: 03-05-2021
Revised: 26-04-2022
Accepted: 07-05-2022
Published: 21-07-2022

Check for updates

**ABSTRACT**

The arts are as old as the appearance of a man. Arts are seen as intertwined with the lives of ancient people. The hunter might have celebrated the success of the hunt by dancing that night to express his joy. After that, the person who engages himself in agriculture and animal husbandry has to face various troubles from nature to the intervention of living beings. In order to free himself from those troubles, he started worshiping thunder, lightning, trees, crows, etc. as deities. As an extension of this worship various folk arts developed. In this way, in the northern part of Kerala, 'Theyyam' is a kind of deity dance performed in the northern part of Kerala by painting various Characters and worshiping the deity. If we examine the original form of Theyyam, the article examines that its origin is the Sangam period.

**Keywords:** Theyyam, Worship, Kerala, Sangam period

## முன்னுரை

நாட்டுப்புற வழிபாட்டு மரபுகள் அந்தந்த சமூகத்தின் பண்பாட்டு, கலாச்சார விழுமியங்களை வெளிப்படுத்துவனவாக அமைகின்றன. கேரளத்தின் வடபகுதியில் பழங்குடி மக்களிடமும், கிராமப்புற மக்களிடமும் காணப்படும் தெய்வ வழிபாட்டில் தெய்யமும் ஒன்று. தெய்யம் என்பது கலைவடிவத்துடன் இறைவழிபாடும் சேர்ந்த வழிபாட்டுக் கலையாகும். திராவிடர் பண்பாட்டோடு ஆரியர் கலாச்சாரமும் கலந்த வழிபாட்டு முறையை தெய்யத்தில் காணலாம். எனினும் தெய்யத்தின் தொடக்ககால கூறுகள் சங்கத் தமிழர்களோடு தொடர்புனவையாக காணப்படுகின்றன. ஆகவே தமிழ் இலக்கியங்களோடு தெய்யம் கலையை ஒப்பிட்டு ஆராய்ந்து தெய்யத்தில் தொடக்ககால வழிபாட்டுமுறையினைக் கண்டடையும் நோக்கில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1. தமிழ் இலக்கியம் வழி தெய்யம்
2. தெய்யாட்டத்தில் ஆரியகலப்பு

என்னும் இரு நிலைகளில் இந்த கட்டுரை அமைந்துள்ளது.

## தெய்யம் - விளக்கம்

'தெய்யம்' என்பது தெய்வம் என்னும் பொருள்படும். 'தெய்வம்' என்ற சொல் சமஸ்கிருதத்திலிருந்து பிறந்தது. தெய்வம் என்பதே 'தெய்யம்' என மருவியது. ஆகவே 'தெய்யாட்டம்' என்பது தெய்வத்தின் ஆட்டம் எனப்படும்.

கலையழகுமிக்க இந்தக் கலையானது சாதாரண மக்களின் நம்பிக்கை சார்ந்த சடங்குமுறைகளை வெளிப்படுத்துவனவாக உள்ளன. தெய்யாட்டம் ஏதாவது ஒரு வகையில் அந்தந்த சாதியினுடைய உறவுகளை உள்ளடக்கியதாக இருக்கிறது. தொடக்ககாலத்தின் தெய்யத் தெய்வங்களின் வழிபாட்டு இடம் மரத்தடிகளாகும். கேரளத்தில் கண்ணூர், காசர்கோடு பகுதிகளில் தெய்யம் ஆடும் வழக்கம் உள்ளது. அவரவர் வழிபடும் தேவதைகளின் வடிவம் பூண்டு ஆடப்படும் ஆட்டமாகும்.

## தெய்யம் வழிபாடு

கேரளத்தில் காளியூட்டு, தீயாட்டு, முடியேற்று, படயணி, பான, சர்ப்பந்துள்ளல், கன்யார்களி முதலான பல கலைகளும் தாய் தெய்வ வழிபாட்டுடன் தொடர்புடையனவாகும். அத்தன்மையில் தெய்யமும் வேடமணிந்து ஆடக்கூடியதாகும். வேடமிட்டு ஆடப்படுவதால் அதனை சாதாரண கலைவடிவமாக எண்ணிவிடமுடியாது. வழிபாடு நடத்தும் காலங்களில் வேடம் அணிபவர் நோன்பு நோற்று, வேடம் தரித்து, தெய்வமேறி வெளிப்படுத்தும்விதமாக 'தெய்யம்' அமைகிறது. தெய்யம் ஆடுபவர்கள் வாக்குச்சொல்லி அருளுகின்றனர்.

"பேசுகின்ற தெய்வங்கள் இவை என்று எண்ணுகின்றனர். மக்கள் அவர்களுடைய துன்பங்களையும், துயரங்களையும் தேவையென நினைக்கும் அந்த 'அருள்வந்த தெய்வ'த்திடம் கூறுகின்றனர். அந்த தெய்வங்கள் அதற்குத் தகுந்தாற்போன்று ஆறுதல் மொழிகளைக் கூறுகின்றன. அத்துடன் பக்தனின் மனம் குளிர்ந்து திருப்தியடைகிறது. ஒருவிதமான ஆறுதலடையச் செய்யும் மருத்துவத்தின் பலனையே அது உருவாக்குகிறது (Vishnu Nampoothiri, 1995). தமிழகக் கிராமப்புறங்களில் வழக்கிலுள்ள மருளாடி அல்லது சாமியர்டி குறி சொல்லும் வழிபாட்டு முறையையே இது ஒத்துள்ளது.

## தமிழ் இலக்கிய மரபு

கேரளத்தின் இலக்கிய வரலாறானாலும், நாட்டு மக்களின் வாழ்க்கை வரலாறானாலும் தமிழகத்தோடு தொடர்புடையதாகவே இருக்கின்றன. அங்கு காணப்படும் பெரும்பாலான கலைகளும் சங்க காலத்தைச் சார்ந்தவையாகவும், சிலப்பதிகாரத்தைச் சார்ந்தவையாகவும் இருக்கின்றன.

திருமுருகாற்றுப்படையில் முருகனை வழிபடுவதற்காகவே நடத்தப்பட்ட ஒரு வழிபாட்டு முறை வேலன் வெறியாட்டு என்பது அனைவரும் அறிந்ததே. முருகன் வேலன் மேல் ஏறி அருள்வாக்குகளை அளிப்பதாக வேலன் வெறியாட்டு குறிப்பிடப்படுகிறது. அதுவே அகத்திணைப் பாடல்களிலும் தலைவன் தலைவி காதலை வெளிப்படுத்தும் இடங்களில் நற்றாயும் செவிலியும் வேலன் வெறியாட்டு நடத்துவதைக் காணலாம்.

"பைங்கொடி நறைக்காய் இடையிருபு வேலன்

அம்பொதிப் புட்டில் விரைஇக் குளவியொடு

வெண்டை தாளம் தொடுத்த கண்ணியன்"

என முருகனை நினைத்து பூசை செய்யும் பூசாரி பச்சிலைக் கொடியால் நல்ல மணமுடைய சாதிக்காயை இடை இடையே சேர்த்து அதனோடு அழகிய தக்கோலக் காயையும் கலந்து காட்டுமல்லிகையுடன் வெண்டாளிப் பூவையும் கலந்து மாலையாக அணிந்ததை முருகன் ஏற்றுக்கொள்வான் என்று வேலனின் கோலம் காட்டப்பட்டுள்ளது (Azhwargal Aaivu Maiyam, 1995).

வெறியாட்டு நடத்தப்படுவதை 'களம் எழுத்து' என்றும் கேரளத்தில் வழங்குகின்றனர். 'களவேள்வி' என சங்க இலக்கியம் பகிர்கிறது. வேலனால் தெய்யத்தில் களம் வரைந்து இரத்த பலி கொடுத்து படையலிட்டு பூசைகள் செய்யப்படுகின்றன.

இதனை

"சிறுதிணை மலரொடு விரைஇ மறியறுத்து

வாரணக் கொடியோடு வயிற்பட நிறீஇ

ஊஉர் கொண்ட சீர்கெழு விழவினும்

ஆர்வலர் ஏத்த மேலரு நிலையினும்

வேலன் தைஇய வெறிஅயர் களனும்"

என அற்புதமானதொரு பூசைக்குரிய காட்சியைத் திருமுருகாற்றுப்படை படம்பிடித்துக் காட்டுகிறது (Azhwargal Aaivu Maiyam, 1995).

இங்கு முருகனே வேலன் என்றும், அவன் உடலில் முருகன் ஆவேசித்து நின்று ஆடல் புரிகிறான் என்றும் வேலன் செயலை முருகன் செயலாகவே பக்தர் ஏற்கின்றனர் என்றும் மருளேறி ஆடுபவர் அந்த தெய்வத்திற்குறிய வேடம் கொண்டு ஆடுதல் முறை என்றும் கூறுகின்றனர்.

திணையரிசியைப் பூக்களோடு கலந்து, ஆட்டுக்கிடாயை அறுத்து, கோழிக்கொடியுடன் விழாவிற்கான இடத்தை அமைத்து வெவ்வேறு இடங்களிலும் பூசைகள் செய்வதாக காணப்படுகின்றது. சிறப்புமிக்க திருவிழாக்களிலும், தன்னிடம் அன்பு காட்டுபவர் தன்னை வழிபட்டுத் துதி செய்ய விரும்பும் இடங்களிலும், பூசாரி அலங்கரித்து அமைத்து வைத்த வெறியாடும் இடத்திலும், காடு, சோலை, ஆற்றங்கரை, குளக்கரை, வெவ்வேறு ஊர்களிலும், நாற்சந்தி, முச்சந்தி, ஐஞ்சந்தி, கடம்ம மரத்தடியிலும், ஊருக்கு நடுவே பலர் கூடியிருக்கும் மரத்தடியிலும், பலர்க்கும் பொதுவான இடத்திலும், கல்தூண் உள்ள இடத்திலும் முருகக் கடவுள் எழுந்தருளி இருத்தலும் உண்டு என்று வித்துவான் எம். நாராயணப்பிள்ளை உரைகுறிப்புத் தருகிறார்.

இந்த பூசைக்குரிய முறையை இன்றும் கேரளத்தின் வடபகுதியில் தெய்யம் ஆட்டத்தில் காணலாம். கோலத்து நாட்டவர் மன்றம் என்பதை 'மன்னம்' என்று தெய்யத்தில் குறிப்பிடுகின்றனர். திருமுருகாற்றுப்படையில் குறிப்பிடும் ஏனைய இடங்கள் இங்கு காவு, முண்ட்யா, அறை, துருத்தி (கழிமுகம்) முதலானவை வழிபடு இடங்களாகக் காணப்படுகின்றன. பெரும்பாலான சடங்குமுறையில் இங்கு பின்பற்றப்படுகின்றன. எனினும் பயன்படுத்தும் பொருள்களில் வேறுபாடுகள் உண்டு. கடம்ப மரத்திற்குப் பதிலாக ஆலமரமும், அத்திமரமும் (பால் மரம்) பயன்படுத்தப்படுகிறது. சிவந்த மலர்களாலும், தென்னை ஓலைகளாலும் பந்தல் அலங்கரிக்கப்படுகின்றது. தெய்யத்தில் புனிதமாக 'கலசம்' என்ற பெயரில் 'கள்' பயன்படுத்தப்படுகிறது. கள்ளைக் கொடுப்பவர் 'களயக்காரன்' என்றழைக்கப் படுகிறான். ஆடு பலியிடுவதற்குப் பதிலாக சேவலும், கோழியும் தெய்யம் சடங்கில் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் அனைத்து தெய்யங்களிலும் சேவல் பலியிடும் சடங்கு தேவையில்லை. கரிம்சாமுண்டி எனும் பீகரமான தெய்வத்திற்கு பண்டைய வழக்கத்தின் தொடர்ச்சியாக ஆடு பலியிடப்பட்டது. தீய ஆவியை ஒழிப்பதற்காக சில தெய்யாட்டங்களில் தெளிப்பதற்காக சுண்ணமும் மஞ்சளும் கலந்த 'குருசி' பயன்படுத்தப்படுகிறது. இந்த சிவப்புநிற தண்ணீரான குருசி புனித பொருளாகவும் தீமையை விலக்கும் தூய்மைப் பொருளாகவும் உணரப்படுகிறது. களத்தில் வேலன் வழங்கும் இரத்தம் 'குருதி' என்னும் தமிழ்ச் சொல்லிலிருந்து பிறந்ததாகும் (Azhwargal Aaivu Maiyam, 1995). வேலன் வெறியாட்டுடன் கள வேள்வியும் இணைந்து தெய்யாட்டத்தில் காணலாம். புறநானூற்றில் தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் மறக்களவேள்வி நடத்தியதை எடுத்துரைத்து மாங்குடி கிழார் பாடல் புனைந்துள்ளார்.

"தெவ்வார் அரிந்ததலை அடுப்பின்

கூவிள விறகின் ஆக்குவரி நுடங்கல்

ஆனா மண்டை வன்னிஅம் துடுப்பின்

ஈனா வேண்மாள் இடம் முழந்து அட்ட

மாமறிபிண்டம் வாலுவன் ஏந்த"

என்னும் பாடல் பகைவர்களின் அறுந்துபட்ட தலையை அடுப்பாகக் கொண்டு கூவிள விறகு கொண்டு எரிந்து ஆக்கிய கூழில் குடல்கள் பிளந்து பொங்க மண்டையோட்டை அகப்பையாகவும்

வன்னிமரத்தின் காம்பினால் துடுப்பு அமைத்துக் கிண்டி இளம்பேய் சமைக்க, பேய்மகன் அதைக்கொண்டு சென்று கொற்றவைக்குப் படைப்பது போன்று வேள்வியைச் செய்தவன் என்று கொற்றவை வழிபாடு காட்டப்பட்டுள்ளது (Kurup, 1973).

இத்தகைய வழிபாட்டு வடிவத்தில் 'வயநாட்டு குலவன்' தெய்யாட்டத்தில் அணில், காட்டுப்பன்றி போன்ற விலங்குகளை பலி கொடுக்கும் வழக்கம் இருந்தது. உயிர்வதைத் தடை செய்த காரணத்தால் இன்று சுட்டத்தேங்காயும், காய்ந்த பிரசாதமாகக் கொடுக்கும் வழக்கம் உள்ளது. "பழைய காலத்திலிருந்த ஒரு சடங்கு தற்காலத்தில் முற்றிலும் தவிர்க்க வேண்டியதாகும் என்ற சுற்றுச்சூழல் ஆர்வலர்களின் வாதம் இப்பொழுதும் வழிபடும் மக்கள் தவிர்ப்பதற்கு விரும்பவில்லை" என்ற செய்தி இன்றளவும் பண்டைய வழக்கங்கள் கடைப்பிடிக்கப்படுவதை எடுத்தியம்புகிறது (Chandray, 2015).

தெய்ய வழிபாட்டில் தீய சக்திகளை ஒழிக்கும் விருப்பத்தில் குருஸி(குருதி) நடத்துகின்றனர். பின்னர் குலைவாழை வெட்டல். பண்டைய காலத்தில் மனிதர்களும் பின்னர் ஆடும், கோழியும் இறுதியாக பூசணிக்காயும் சுண்ணாம்பும் மஞ்சளும் இப்படித்தான் இரத்தத்தின் காலமர்ற்ற வளர்ச்சி நடந்தது" என்னும் செய்திகள் யாவும் தெய்யத்தின் கலை வழிபாட்டு வடிவங்கள் தமிழக நாட்டுப்புற பழங்குடி மக்களின் பண்பாட்டு நீட்சியாக இன்றும் வட கேரளத்தில் கடைபிடித்து வருவதைக் காணமுடிகிறது.

## நடுகல் வழிபாடு

சங்க காலத்தில் மறவர்களுக்கு இணையாக மறவப் பெண்களும் வீரதீரமிக்கவர்களாகத் திகழ்ந்ததை அறிவோம். 'துஞ்சிய', 'செறுவென்ற' என்ற சொற்கள் போர்க்களத்தின் வெற்றி தோல்வியைக் காட்டும் சொற்களாக இருப்பதை புறப்பாடல்கள் வழி தெளியலாம். 'துஞ்சிய' என்றால் 'இறத்தலையும்', 'செறுவென்ற' என்பது போரில் வெற்றி பெற்றதையும் குறிக்கின்றன. இந்நிலையில் வீரமரணம் அடைந்த அரசர்களுக்கோ படைவீரர்களுக்கோ நினைவுச்சின்னம் அல்லது நடுகல் அமைத்து வழிபாடு நடத்தப்பட்டுள்ளது.

"இல்லே பரவின் அல்லது

நெல் உகுத்துப் பரவும் கடவுளும் இலவே"

என்னும் புறப்பாடல் போரில் யானையை வீழ்த்தி தாமும் வீழ்ந்து நடு கல்லாகியவரைப் பூவும் நெல்லும் தூவி வழிபடுவதன்றி வேறு வழிபடும் தெய்வம் இல்லை என்று உரைக்கிறது (Avvai Duraisamy pillai, 2010). இத்தகைய வழக்கத்தின்படி தமிழகத்தில் நடுகல் வழிபாடு இன்றளவும் நாட்டார் தெய்வ வழிபாட்டு கூறுகளில் ஒன்றாகக் காணப்படுகின்றது.

வடக்கன் கேரளத்தில் 'படைவீரன்' என்ற ஒரு போர்வீரனை தெய்யத்தில் வழிபடு தெய்வமாகக் கொள்கின்றனர். "சிற்றரசர்களுக்கிடையில் நடந்த ஒருபோரில் பங்கெடுத்த ஒரு வீரனே 'படைவீரன்'. இத்தகைய வீரர்களின் தெய்ய வழிபாட்டுச் சடங்குகள் நடுகல் வழிபாட்டின் தொடர்ச்சி என்பதை மறுப்பதற்கில்லை.

## ஆரிய கலப்பு

தமிழகத்தின் ஒரு பகுதியாக இருந்த சேரநாட்டில் கி.பி.8-ம் நூற்றாண்டு முதலே ஆரியர் கலப்பு ஏற்பட்டதால் நாட்டின் மொழி, பண்பாடு, சடங்கு, கலைகள் முதலான பல்வேறு வடிவங்களில் ஆரியக் கலப்பு நிகழ்ந்துவிட்டது. கர்நாடகத்திலிருந்து துளுதேசம் வழியாக கேரளத்தின் பல பகுதிகளுக்கும் பரவியவர்கள் ஆரியர்கள். அவ்வகையில் கோலத்து நாட்டில் ஆரியப்பண்பாடு சீராகப் பரவத் தொடங்கியது. மொழிக் கலப்பு ஏற்பட்டது போலவே திராவிடப்பண்பாடுகளின் கலைகளில் நம்பூதிரிகளின் செல்வாக்கு பெரும்பங்காக மாறியது.

அதுவரை வெவ்வேறு பழங்குடி மக்களால் பின்பற்றப்பட்டுவந்த வழிபாட்டு கலைகளின் வைணவமும், சைவமும், சக்தி வழிபாடும் (பகவதி) நிலையான இடத்தைத் தக்கவைக்கத் தலைப்பட்டன. மலபாரில் பிராமணர் இல்லத்தை அடுத்து பகவதியை பிரதிஷ்டை செய்து வணங்கும் பள்ளியறைகளைக் காணலாம். பகவதி, சாமுண்டி விஷ்ணுமூர்த்தி, பொட்டன் முதலான தெய்யங்கள் பிராமணர் தொடர்பானவையாக இருக்கின்றன. வேலன் வெறியாட்டு நடத்தி ஆராதிக்கப்பட்ட தெய்யங்கள் ஆரியர் வருகையால் மாற்றங்களுக்கு உள்ளாகின்றன. “சடங்கு முறையின் (வெறியாட்டு) எச்சங்கள் மாற்றமடைந்தன. ஆனால் அவர்கள் ஆரியர்களின் கருத்தாக்கங்களை சேர்த்துக் கொண்டு வைணவ, சைவ, சக்தி முதலான வழிபாட்டு தெய்வங்களை பரம்பரைத் தெய்வங்களாக அமைத்துக் கொண்டனர். பகவதி, சாமுண்டி, விஷ்ணுமூர்த்தி, பொட்டன், இரக்தே ஷ்வரி போன்றவை பின்னாளில் கோலத்து நாட்டின் நாட்டார் தெய்வங்களாக மாறின” (Kurup, 1973). கேரளத்தில் குடியேறிய பிராமணர்கள் 64 கிராமங்களில் குடியமர்த்தப்பட்டதாக கேரளோற்பத்தி கூறுகிறது.

வேற்று நாட்டிலிருந்து மரக்கலம் ஏறி கேரளக்கடல் கரையில் வந்து சேர்ந்த தெய்வங்களாகச் சிலவற்றைக் கொள்கின்றனர். ஆர்யப்பூங்கண்ணி, ஆர்யப்பூமால, ஆயித்தி பகவதி, ஆர்யக்கர பகவதி, ஷீPலக்குடாரியம்ம, (மரக்கலத்தம்மா), வில்லாபுரத்து அஸிராளன், வடக்கன் கோடிவீரன் போன்றோர் மரக்கலப்பயணம் மேற்கொண்ட தேவதைகள் என்கின்றனர்.

ஆரிய நாட்டிலிருந்து மரக்காலத்தில் ஏறி கோலத்து நாட்டிற்கு வந்த அன்னபூர்ண்ணேஷ்வரியுடன் மூத்தபகவதி, மடயில்பகவதி. சீறத்து பகவதி, குணோல் பகவதி, கொச்சம்மன் பகவதி, சீரங்ஙோட்டு பகவதி என ஏழு தேவதைகள் வந்ததாகவும் புலயர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் நம்புகின்றனர்.

விஷ்ணுமூர்த்தி தெய்யங்கள் சிலவற்றில் களமெழுத்து அல்லது வெறியாட்டுச் சடங்கின் போது சேவல் முதலான இரத்தபலிகள் கொடுக்கப்படுகின்றன. அவை கோவிலுக்குள் வைத்து செய்யப்படாமல், கோவிலுக்கு வெளியில் பலி கொடுக்கப்படுவதாகவும் செய்திகள் உள்ளன. கேரளத்தில் பகவதி வழிபாடு ஆரியரின் புலம்பெயர்வினால் தோன்றியது என்றும் கண்ணகி வழிபாட்டுடன் தொடர்பு உடையது என்றும் பல்வேறு கருத்துகள் அறிஞர்களிடையே நிலவுகின்றன.

## முடிவுரை

தமிழ் இலக்கியங்கள் காட்டும் தமிழகத்தில் மறைந்துவிட்ட வேலன் வெறியாட்டு சடங்கு இன்றளவும் கேரளத்தில் நிலைத்து நிற்கின்றன. சங்க மருவிய காலத்தில் சமண பௌத்த சமயங்களின் செல்வாக்குமிகுந்து காணப்பட்டதால் உயிர் கொலை மறுக்கப்பட்டு வெறியாட்டுச் சடங்குகள் மறைந்திருக்கிறது எனலாம். அதனை அடுத்து பக்தி இயக்க வளர்ச்சியால் நாயன்மார்களும் ஆழ்வார்களும் தத்தம் மதம் சார்ந்த பண்பாட்டு கலாச்சாரங்களை வளர்த்தெடுப்பதில் முனைப்பாக இருந்ததால் வேலன் வெறியாட்டு மெல்ல மெல்ல மறையத் தொடங்கியது எனலாம். ஆரியக் கலப்பினால் தமிழக, கேரள மொழிகளில் மாற்றங்கள் ஏற்பட்டது போலவே கலைவடிவங்களிலும் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. பழங்குடிகளின் கலைவடிவங்கள் புலம்பெயர்ந்து பிராமணர்களின் வழிபாடுகளையும் தம்முடன் இணைத்துக் கொண்டன. அதனால் தொன்று தொட்டு வழக்கிலிருந்த தெய்ய வழிபாட்டில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஆனால் முற்றிலுமாக மறையவில்லை. இயற்கை வழிபாட்டுச் சடங்குகள் சங்ககாலம் முதலே இன்றளவும் நாட்டார் மக்களின் வழிபாடுகளில் இரண்டறக் கலந்துள்ளன. அவை தனித்தனி வழிபாடுகளாக தெய்யத்தில் காணப்படுகின்றன. கேரளத்தில் இன்றைய வழிபாட்டு கலையாகக் காணப்படும் தெய்யாட்டங்கள் தமிழர் வழிபாட்டோடு தொடர்புடையனவாகக் காணப்படுகின்றன. வேலன், பாணர் போன்ற சமுதாயத்தார் இன்று தமிழகத்தில் இல்லை. மிகக் குறைந்த அளவில் பாணர்கள் தமிழகத்தில் வாழ்கின்றனர். ஆனால் கேரளத்தில் வேலன்களும் பாணர்களும் அவரவர்களின் பரம்பரை பண்பாட்டு வழக்கத்தைப் பின்பற்றுபவர்களாக உள்ளனர். கேரளத்தில் பண்டைய சமுதாயத்தில் தீண்டத்தகாதவர்களாக இருந்த பல சமுதாயத்தாரும் கோலம் கட்டி ஆடும் போது அவர்களது வடிவில் இறைவனைக் காண்பதால் உயர்சாதிக்காரர்களும் அவர்கள் முன் தலைவணங்கி நிற்கும் நிலையைக் காணமுடிகிறது. நடுகல் வழிபாடு, தாய் தெய்வ வழிபாடு,

முன்னோர் வழிபாடு போன்ற திராவிடப் பண்பாட்டுக் கூறுகள் இன்றும் கேரளத்தில் நிலைபெற்றுள்ளமை தமிழ், மலையாளத்திற்கான உறவு நிலைகளை பறைசாற்றுவனவாக அமைந்துள்ளமை போற்றுதலுக்குரியவையாகும்.

## References

Avvai Duraisamy pillai, S., (2010) Purananooru Moolam Uraiyum, Poompuhar Pathippagam, Chennai, India.

Azhwargal Aaivu Maiyam, (1995) Thirumurugatrupadai, Mulai Nilaiyam, Chennai, India.

Chandran Muttathu, (2005) Silampu dheivam urpathiyum sariththiramum, Mulai Nilaiyam, Chennai, India.

Chandray, C.M.S., (2015) Deivathin Athirupam, Mulai Nilaiyam, Chennai, India.

Kurup, K.K.N., (1973) The cult of Teyyam and Hero Worship in Kerala, Indian Publications, Calcutta, India.

Vishnu Nampoothiri, M.V., (1995) Theyyavum Thirayum, University of Kerala, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License